நேரடியாகப் பேசுங்கள். (குறுக்கீடு) என்னிடம் படத்தைக் காட்டுங்கள். அதைக் காட்டிவிட்டுப் பிறகு பேசுங்கள். (குறுக்கீடு) அதைக் காட்டிவிட்டு, அதற்குப் பிறகு நீங்கள் முதலமைச்சர் அவர்களிடம் தனியாகப் பேசி என்னவென்று பாருங்கள். அவையிலே பேசமுடியாது. என்ன நிகழ்ச்சி என்று அரசுத் தரப்பிலிருந்து உடனடியாக விடை சொல்ல முடியாது.

(திரு துரை ராமசாமி புகைப்படம் ஒன்றை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்தார்).

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பேரவை உறுப்பினர் வீட்டில் போய் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். அதைப்பற்றி இந்த மன்றத்தில் சொல்வதற்கு அனுமதி இல்லை என்றால் எப்படி? அப்படி என்றால் எங்களுக்கு என்ன பாதுகாப்பு? பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு அனுமதியில்லை என்றால் எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன் நீங்கள் பேசுங்கள். தயவுசெய்து திரு. துரை ராமசாமி உட்காருங்கள்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்காக இதைக் கொண்டு வருகிறேன். அவர்கள் மற்ற அலுவல்களைப் பார்ப்பதால் நான் இதைச் சொல்கிறேன். (குறுக்கீடு).

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரை ராமசாமி தயவுசெய்து உட்காருங்கள். திரு. இராஜேந்திரன் பேசுங்கள்.

(திரு. துரை ராமசாமி நின்றுகொண்டே இருந்தார்).

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20—4—1989 அன்று வேதாரண்யத்தில் நடந்த ஒரு கொலை சம்பந்தமாக, ஒரு அரசியல் கொலை சம்பந்தமாக இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்கவேண்டும் என்பதற்காக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து இருந்தேன். இந்த அவையின் இதர

ஆவல்களை ஒத்திவைத்து இதனை விவாதிக்கவேண்டும் என்று கேட்டு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொடுத்து இருந்தேன். அதன் மீது நான் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். (குறுக்கீடு).

(திரு. துரை ராமசாமி நின்றுகொண்டே இருந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு அது ஏற்கப்பட்டு இருக்கிறதா நிராகரிக்கப்பட்டு இருக்கிறதா என்று எல்லாம் தெரியாமல் எப்படி நீங்கள் அதன் மீது பேசுவீர்கள். அப்படி என்றால் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எல்லோரும் கொடுத்துவிட்டு இப்படி எழுந்து பேசி விடுவதா ? (குறுக்கீடு) இல்லை, என்ன மரபு என்று தெரியவேண்டும்? அதற்கு மட்டும் எனக்குப் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தால் அது பற்றி என்னுடைய அறையில் வந்து கேட்கவேண்டும். இன்றைக்குக் கூட ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. எல்லோரும் உட்காருங்கள். திரு. துரை ராமசாமி அவர்களும் உட்காருங்கள்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு பதிலை எதிர்பார்க்கிறேன்.

திரு. துரைராமசாமி : எங்களுக்குப்பேச வாய்ப்புத் தராததால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்).

(ஈ) தனியார் துறை ஆசிரியர்களுக்கு மருத்துவப்படி வழங்க வேண்டுமென்ற கோரிக்கை.

திரு. கோ. வீரையன் : குறிப்பாக அனைத்துப் பகுதி ஆசிரியர்களுக்கும் மாதம் 15 ரூபாய் மருத்துவப்படியாக வழங்கப்படுகிறது. ஆனால் தனியார் துறையில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்கு மட்டும் இது வழங்கப்படவில்லை. இதை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும். அதேபோல் நகராட்சி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஏற்று அவர்களின் ஊதியம் நகராட்சியின் மூலமாக வழங்கப்படுவதால் அது காலத்தில் கிடைப்பது இல்லை. அதை அரசு நேரடியாக வழங்கவேண்டும் என்று கோரி தமிழகத்தில் உள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் சங்கத்தின் சார்பில் இன்று ஒரு இயக்கம் நடைபெறுகிறது. இந்த